**சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2018**

---

## 1.1 அபிப்பிராயம்

சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களின் வயதுப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. சாத்தியமானளவு விரைவாக புதிய கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளது. புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதும் அத்தகைய விடயங்கள் வழங்கப்படும். | இருப்புக்களிற்கான வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) பிபிஈ பதிவேடு excel version ஒன்றில் பேணப்படுகின்ற | கிரயம் (சொத்தின் பெறுமதி), சொத்தின் | நிலையான சொத்துக்களின் |

| | | |
|---|---|---|
| போதிலும் அனைத்து ஆதனம், பொறி மற்றும் போதியளவு விபரங்கள், முறையான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புச் செயன்முறையுடன் உபகரணம் தொடர்பான விரிவான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | வகை, கொள்வனவு/ பெற்ற திகதி, பெறுமானத்தேய்வு வீதம், பதிவழிக்கப்பட்ட பெறுமதி, அகற்றல் திகதி மற்றும் பௌதீக இருப்பிடம் ஆகிய தகவல்களை உள்ளடக்கி நிலையான சொத்துப் பதிவேடொன்றை கம்பனி ஏற்கனவே பேணியிருந்ததுடன் தொழில்சார் நிறுவனத்தின் உதவியுடன் நிலையான சொத்துக்களை அடையாளக் குறியீடு இடுதல் மற்றும் இனங்காணுதல் செயன்முறையை கம்பனி ஏற்கனவே ஆரம்பித்திருந்தது. உரிய வேலை பூர்த்தியடைந்ததும் அதற்கிணங்க எங்களது பதிவேடு நாளதுவரையாக்கப்படும். | அனைத்து வகைப்படுத்தலுக்கும் விரிவான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எல்கேஏஎஸ் 36 சொத்துக்களின் நட்டக்கழிவின் பிரகாரம் சொத்தொன்றிற்கு நட்டக்கழிவு காணப்படக்கூடும் என ஏதாவது சுட்டிக்காட்டல் காணப்படுகின்றதா என இனங்காண்பதற்கு அறிக்கைத் திகதியில் உள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்காக நட்டக் கழிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது குறித்துக் கொள்ளப்பப்பட்டுள்ளது. பௌதீக மெய்மையாய்விற்காக வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் சேதங்களாக கருத்தில் கொள்ளப்பட்ட சில விடயங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான வருடாந்த நட்டக்கழிவு பரிசோதனையை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை கம்பனி எதிர்காலத்தில் மேற்கொள்ளும். | வருடாந்தம் நட்டக்கழிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6 தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலமைக் கூற்றிலுள்ள பின்வரும் மீதிகளின் நேரடியான உறதிப்படுத்தல்களை நாங்கள் கோரியிருந்த போதிலும் அவை கிடைக்கப்பெறாததால் அவற்றின் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மை தொடர்பாக சுயாதீன உறதிப்படுத்தலை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.<br><br>பீஓசீ நலன்புரி பிரிவு (ரூபா) 9,270<br>இலங்கை வங்கி (பீஓசீ) (ரூபா) 70,380<br>பீஓசீ நிர்வாக சேவை பிரிவு (ரூபா) (1,992,222) | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது மேற்படி மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை வங்கியின் உரிய பிரிவிற்கு வேண்டுதல் ஒன்றை நாங்கள் ஏற்கனவே மேற்கொண்டுள்ளோம். | கணக்காய்விற்கு நேரடியான உறுதிப்படுத்தல்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

1. மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,472,389 நட்டமொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,070,953 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 4,543,342 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் குறைவடைந்தமை, விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாகச செலவினங்கள் அதிகரித்தமை என்பன மேற்படி வீழ்ச்சிக்கான காரணங்களாக உள்ளன.

| ஆண்டு | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா) | 138,786,550 | 141,753,074 | 143,887,536 | 133,225,328 |
| வரிக்குப் பின்னரான தேறியலாபம்/ (நட்டம்) | (2,472,389) | 2,070,953 | (465,024) | (2,925,585) |

2. கதிர்காமம், அநுராதபுரம், நுவரெலியா மற்றும் டிக்கோயாவில் உள்ள கிளன்சரின் சுற்றுலாவிடுதி ஆகியவற்றில் உள்ள நான்கு சீபாங் உணவு விடுதிகளை கம்பனி நடாத்துகின்றது. கதிர்காமம் சீபாங் ரெஸ்ட் 16 சதவீதத்தால் புரள்வு அதிகரித்ததன் காரணமாக முன்னைய ஆண்டின் ரூபா 1,229,085 தொகையான நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 271,206 தொகையான இலாபம் ஒன்றை அடைந்திருந்தது. அத்துடன் அநுராதபுர சீபாங் ரெஸ்ட்டின் முன்னைய ஆண்டின் ரூபா 4,910,865 தொகையான இலாபம் ரூபா 5,084,797 வரை அதிகரித்திருந்தது. மேலும், நுவரெலியா சீபாங் ரெஸ்ட் முன்னைய ஆண்டின் ரூபா 1,766,025 தொகையான இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,487,207 நட்டம் ஒன்றை அடைந்திருந்தது. முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட கருத்துரைகளின் பிரகாரம் நுவரெலியா சீபாங் ரெஸ்ட்டின் மேற்படி வீழ்ச்சிக்கான காரணங்கள் மோசமான காலநிலை, அறைகளின் நலிவான தரம் மற்றும் தங்கியிருப்பவர்கள் குறைவடைதல் என்பனவாகும். அத்துடன் டிக்கோயா கிளன்சரின் சுற்றுலாவிடுதியின் நட்டம் முன்னைய ஆண்டின் ரூபா 1,125,060 தொகையான நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,944,892 வரை

அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் 12 சதவீதத்தால் உணவு விடுதி வருமானம் குறைவடைந்தமை இதற்கு காரணமாகும்.

3. இணங்கப்பட்ட முகாமைத்துவ கட்டணத்திற்காக இலங்கை வங்கி பதவியணியினருக்கு சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு கம்பனியானது 8 பீஓசீ ஹொலிடே ஹோம்ஸ் மற்றும் 28 bachelor's விடுதிகளை வழங்கியிருந்தது. லின்டுலாவில் உள்ள சீபாங் ஹொலிடே ஹோம் முன்னைய ஆண்டின் ரூபா 47,750 நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 261,572 இலாபம் ஒன்றை ஈட்டியிருந்ததுடன் கம்பனி மீளாய்வாண்டின் போது நிறைவேற்று தேநீர் சேவைகள் மற்றும் பீஓசீயின் மத்திய பயிற்சி நிறுவனம் - மஹரகம (சீரீஜ) என்பவற்றிலிருந்து முறையே ரூபா 339,030 தொகையான குறிப்பிடத்தக்களவு நட்டம் மற்றும் ரூபா 61,741 தொகையான நட்டத்தை அடைந்திருந்தது.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | 2017 |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதம் (சதவீதம்)** | | |
| தேறியலாப விகிதம் | (1.78%) | 1.46% |
| மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் | (6.77%) | 5.19% |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | (1,031.72%) | (76.36%) |
| **திரவத்தன்மை விகிதங்கள் (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறை விகிதம் | 0.75 | 0.89 |
| விரைவு விகிதம் | 0.63 | 0.77 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அநுராதபுரம் குத்தகைக் கட்டிடத்திற்காக கம்பனிக்கும் (குத்தகைக்குப் பெற்றவர்) மற்றும் இலங்கை வங்கிக்கும் (குத்தகைக்கு வழங்கியவர்) இடையே எழுத்து மூலமான உடன்படிக்கை காணப்பட்டாதமை அவதானிக்கப்பட்டது. | கம்பனிக்கும் (குத்தகைக்குப் பெற்றவர்) மற்றும் இலங்கை வங்கிக்கும் (குத்தகைக்கு வழங்கியவர்) இடையே குத்தகை உடன்படிக்கை ஒன்றை தயாரிக்கும் செயன்முறையில் காணப்படுகின்றது. | குத்தகைக்கு வழங்கியவருடன் எழுத்து மூலமான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இட ஒதுகீடுகளை ஏற்றுக்கொண்டு கையாளுவதற்கு மத்தியப்படுத்தப்பட்ட இடம் ஒன்று காணப்படாதமை அவதானிக்கப்பட்டது.<br><br>உதாரணம் :- பீஓசீ நலன்புரி பிரிவு | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. நாங்கள் ஏற்கனவே புதிய ஒன்லைன் இட ஒதுக்கீட்டு முறைமையொன்றை அமுல்ப்படுத்துவதற்கு அல்லது ஏற்கனவே உள்ள | ஒரு இடத்தின் ஊடாக வாடிக்கையாளர் இட ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | (கதிர்காமம், அநுராதபுரம், - ஓல்ட்விங் நுவரெலியா)<br><br>உதாரணம் :- கம்பனியின் தலைமை அலுவகம் அநுராதபுரம் - பின்னாகிள் டிக்கோயா – மேல் - கீழ்) | இட ஒதுக்கீட்டு முறைமையை மீளாய்வு செய்வதற்கு நாங்கள் இலங்கை வங்கிக்கு வேண்டுதலொன்றை ஏற்கனவே மேற்கொண்டுள்ளோம். இது அறிமுகப்படுத்தப்பட்டதும் இச் சிக்கல் தீர்க்கப்படும். | |
| (இ) | இலங்கை வங்கியிலுள்ள நிறைவேற்றுப் பதவியணியினரிற்கு தேநீர் சேவையை வழங்குவதற்காக திருகோணமலை, கண்டி மற்றும் ஊர்காவற்துறையில் உள்ள பதவியணியினர் விடுதிகளை பேணுவதற்காக இலங்கை வங்கிக்கும் (பீஓசீ) கம்பனிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட எழுத்து மூலமான உடன்படிக்கை காணப்படாதமை குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இலங்கை வங்கியின் உயர் முகாமைத்துவத்திற்கு மேற்படி விடயம் அறிவிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும். | பீஓசீயுடன் முறையான எழுத்து மூலமான உடன்படிக்கையை பேணுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒழுங்கான அடிப்படையில் நடாத்தப்பட வேண்டும்.<br><br>மீளாய்வாண்டின் போது கம்பனி ஆகக் குறைந்தது ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தையேனும் நடாத்தியிருக்கவில்லை. | கம்பனி தற்போது வரை கணக்காய்வு குழுவை உருவாக்கி இருக்கவில்லை. எனினும், இக் குறைபாடு கம்பனியால் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2019 இல் முடிவடையும் 4 ஆவது காலாண்டில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் கணக்காய்வு குழுவை உருவாக்குவதற்கு 2019 ஒக்தோபர் 01 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் இதற்கான சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. கம்பனியின் பொது முகாமையாளரின் பங்குபற்றலுடன் இரண்டு பணிப்பாளர்கள் உறுப்பினர்களாக காணப்படுவர். | ஆகக் குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒழுங்கான அடிப்படையில் நடாத்தப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

**4.2 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிசீடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் ஒழுங்கமைப்பு வரைபடத்தை கொண்டிருக்க வேண்டியதுடன் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் இது பதிவு செய்யப்பட வேண்டும்.<br><br>கம்பனி மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை கொண்டிருக்கவில்லை. | கம்பனி தற்போதைய தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு வரைபு பதவியணியொன்றை தயாரித்து சபையின் அங்கீகாரத்திற்காக வழங்கியிருந்தது. எனினும், இலங்கை வங்கியால் சீஎச்எச்எல் உரித்தாக்கப்பட்டதால் இலங்கை வங்கியின் நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த திட்டத்துடன் சேர்த்து பதவியணி தேவைப்பாட்டை மீளாய்வு செய்வதற்கு கம்பனி முகாமைத்தவத்தை சபை கோரியிருந்தது. அதற்கிணங்க முகாமைத்துவம் அங்கீகாரத்திற்காக புதிய பதவியணியை குறுகிய காலத்தில் மீள சமர்ப்பிக்கும். பதவியணியை சபை அங்கீகரித்ததும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அதனை சமர்ப்பிப்பதற்கு நாங்கள் ஒழுங்கு செய்வோம். | கம்பனி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் ஒழுங்கமைப்பு வரைபடத்தை கொண்டிருப்பதற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் அதனை செய்வதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |